பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஐப்பசி 29௳ (15—11—67) புதன் வெளியூர்: ஐப்பசி 30௳ (16—11—67) வியாழன் [இதழ்: 127

டில்லி அரங்கம் -- 2



# காமராசர் தலைமை: ஒரு கணக்கெடுப்பு!

படிப்படியாக அல்லது படிகளின் மூலம் உயரே சென்றிருந்தால், கீழே இறங்க நேரிடும் போதும் அப்படியே வரலாம்!

திடீரென உயரே சென்றவர்கள் கீழே அனுப்பப்படுவதும், திடீரென்றுதான் இருக்கும்!

காங்கிரசின் தலைவராக இல்லாமலேயே அனைத்திந்தியக் காங்கிரசின் பெரும் புள்ளிகளாகப் பலர் இருந்திருக்கிறார்கள்—இருக்கிறார்கள்!

ஆனால் காமராசரோ, தமிழகத்தில் தெரிந்திருந்த அளவுக்கு மற்ற எல்லா மாநிலக் காங்கிரசு அமைப்புகளிலும் பிரபலமாக இருக்கவில்லை! தலைவராக வந்த பின்னரே அனைவருக்கும் தெரிந்தவரானார்!

தலைவர் பதவியும், அவர் தேடி—அதற்காக உழைத்ததனால் கிட்டியதல்ல; அல்லது அவரைத் தேடி வந்ததும் கிடையாது! இவரும் நாடிப் போகாமல் அதுவும் தேடிவராமல், குறுக்கே இருந்த பண்டித நேரு பார்த்துக் கொடுத்த 'வெகுமதி' அது!

"என் சொத்து உங்களில் எவருக்கும் இல்லை; தர்மத்துக்கு எழுதி வைக்கிறேன்" என்று—பிள்ளைகளின்மீது சொதிப்படைந்த தகப்பன் செய்ததுபோல்—வடக்கே இருந்தவர்களைச் சமாளிக்க, கட்சியின் தலைமைக்குத் தேடிய 'தர்மம்' காமராசர்!

அப்போது நேரு, தெற்கே 'தலை வைத்துப் படுத்ததற்கு'ப் பல காரணங்கள் உண்டு. வடக்கேயே ஒரு காமராசர் அவருக்குக் கிடைத்திருக்கக்கூடும். தெற்கே இருந்த அவரைத் தேடிப் பிடித்ததன் மூலம், கட்சி மட்டத்தில்—அரசியலில்—தேசிய அளவில் ஒரு சமநிலை இருப்பதாகக் கூறிக்கொள்வதற்கு, நேரு இதனை ஒரு சாதகமாகப் பயன்படுத்தினார்! அப்போதிருந்த வடக்கு—தெற்கு சூழ்நிலையில், காமராசர் ஒரு 'காகிதப் பாலமாக'ப் பயன்படுவார் என்பதும், நேருவின் நடவடிக்கைக்கு ஒரு காரணம்!

இந்தப் பின்னணியில், காங்கிரசின் தலைவராக வந்த காமராசர், நேரு இருந்தபோது இயங்கியதற்கும்—அவர் மறைவுக்குப்பின் நடந்துகொள்வதற்கும் பெருத்த மாறுபாடு இருப்பதனை, கட்சி மட்டத்தில் அனைவரும் உணரத் தலைப்பட்டனர்!

தமிழக மட்டத்தில் காமராசர், பொதுவாழ்வில் எப்படி இருந்தார் என்பதும் இங்கு நினைவுகூரத் தக்கது.

இருக்கின்ற திட்டத்துக்குத் தக்கவாறு அவர் தன்னை மாற்றிக்கொண்டதில்லை. தனக்கு ஏற்றவாறுதான் இருக்கின்ற இடத்தை மாற்றியிருக்கிறார்!

'தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டித் தலைவர்' என்றபோதும் அரசியல் மையப்புள்ளி அவர்தான்!

'தமிழக முதலமைச்சர்' என்றபோதும், மையப்புள்ளி அவர்தான்!

கட்சியில் அவர் இருந்தபோது, நிர்வாகத்துக்கு முதலிடம் கிடையாது!

நிர்வாகத்தில் அவர் இருந்தபோது, கட்சி முக்கியத்துவம் அவருக்கு அடுத்தபடிதான்!

இதே போக்கினை அவர் அனைத்திந்திய அரசியலிலும் காட்டத் துவங்கியதுதான், திடீரென உயரே போனதற்கும்—இப்போது அதே வேகத்தில் கீழே வருவார் என எதிர்பார்க்கப்படுவதற்கும் உள்ள அடிப்படைக் காரணமாகும்!

1947-க்குப்பின்—நேரு ஒருவரைத் தவிர—கட்சித் தலைமையை அதிக அளவுக்கு 'ஆக்கிரமித்த' போக்கு, காமராசரிடத்தில் காணப்பட்டது!

நேரு தலைமையமைச்சராகவும், காமராசர் கட்சியின் தலைவராகவும் இருந்தபோது நிலவிய சுமூக உறவு முறைகள், பின்னால் சாஸ்திரியின் பதவிக் காலத்தின்போதும்—இப்போது இந்திராவின் காலத்திலும் இல்லாமற்போனதுடன், கட்சித் தலைமைக்கும்—நிர்வாகத் தலைமைக்கும் ஒரு கசப்பே எழுந்திருப்பதனைக் காண முடிகிறது!

'காமராசரால் கண்டெடுக்கப்பட்டவர்கள்' என்ற பெருமைக்குரிய சாஸ்திரியும், இந்திராவுமே கட்சி மட்டத்தில் அவர் தலைமைமீது வெறுப்பும் விரோதமும் காட்டத் துவங்கியது, காங்கிரசின் வரலாற்றில் ஒரு முக்கியக் கட்டமாக இருக்கப்போகிறது!

அனைத்திந்திய மட்டத்தில், 'மக்கள் அடிப்படை'யைக் காங்கிரசு எப்போது இழக்க ஆரம்பித்ததோ—ஏறக்குறைய அதே சமயம்—காங்கிரசில் கட்சித் தலைமைக்கும்—நிர்வாகத் தலைமைக்கும் தீர்வு காணமுடியாத பிணக்கும் துவங்கியது!

"கட்சியின் பலமும் மதிப்பும், நிர்வாகத்திலும் மக்கள் மத்தியிலும் சரிந்துவிட்ட நிலைமைக்குக் காரணம் நிர்வாகம்தான்" என கட்சித் தலைமையும்—'கட்சித் தலைமைதான்' என நிர்வாகமும் ஒன்றையொன்று வெளிப்படையாகத் தூற்றிக்கொள்ளத் தலைப்பட்டன!

காமராசரின் தலைமையமைச்சராக இந்திரா அமையவில்லை! இந்திராவின் தலைவராகக் காமராசர் இருக்கவில்லை!

இதற்கிடையில், நிர்வாக நடைமுறைகள் பற்றி காமராசருக்கும்—கட்சி அலுவல்கள் பற்றி இந்திராவுக்கும் கருத்து வேறுபாடு வெளிப்படையாக வளர்ந்தது!

1967 தேர்தல், இவை அனைத்துக்கும் உச்சக் கட்டமாக அமைந்தது!

இந்தியாவின் பாதி மாநிலங்களை எதிர்க் கட்சியினரிடம் ஒப்படைத்த 'முதல் பெருமை' காமராசரின் தலைமைக்குக் கிடைத்தது!

"நாங்கள் எதிர்க் கட்சிக்காரர்களாகி இருப்பது, காமராசரின் திறமைக் குறைவின் காரணமாகத்தான்" என்று கூறப்படுவதற்கு—பல்வேறு மாநிலத்துக் காங்கிரசுக்காரர்களின் தனிப்பட்ட தவறுகளுக்கு—காமராசர் ஒரு கவசமாகியிருக்கிறார், 1967-க்குப்பின்!

மாநில—மத்திய அரசுகளின் நிர்வாகக் குறைபாடுகளுக்கோ, அல்லது கட்சியிலேயே உள்ள மொத்தத் தவறுகளுக்கோ காரணமாகிக் காங்கிரசு சரிந்ததற்கு—தலைமைப் பதவியின் காரணமாக—காமராசரும் தனிப்பட்ட வகையில் பொறுப்பேற்க வேண்டியவராக இருக்கிறார்!

'இளைஞர்களுக்கு வழிவிடுங்கள்' என இங்கே தமிழகத்துக் காங்கிரசுக்கு அறிவுரை நல்கிய அவர், அதையே ஒரு தந்திரமாகப் பயன்படுத்தி, அனைத்திந்தியப் பொறுப்பிலிருந்தும் தட்டிக் கழித்துக்கொண்டு திரும்பிவிடலாம்!

"ஆனால், இருக்கும் அதையும் விட்டு இங்கே வந்து எதைச் செய்வது?" என்ற கேள்வி ஒன்றுதான், காமராசரின் எதிர்காலத்தையே நினைவுபடுத்தும் ஒரே பிரச்சினையாக இருக்கிறது!

"நடந்தது நடந்துவிட்டது; இன்னுமொரு பதவிக்காலம் தந்தால், தவறுகளைக் களைந்து புதிய பலம் ஏற்றி கட்சியை மெருகுபடுத்துகிறேன்" என்ற வாக்குறுதியை வெளிப்படையாகத் தந்து—காமராசர் மீண்டும் தலைவராக முயற்சி செய்யலாம்!

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

## வேலையில்லாத பொறியியல் பட்டதாரிகள்!

### சங்கம் நிறுவியுள்ளனர்

போபால், நவ. 15—

மத்தியப் பிரதேசத்தில் 4,000-க்கும் அதிகமான எஞ்சினீயரிங் பட்டதாரிகளும், 'டிப்ளமோ'தாரர்களும் வேலையின்றித் திண்டாடுகிறார்கள்; இவர்கள், தங்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஜபல்பூரில் ஒரு சங்கத்தை ஆரம்பித்துள்ளனர்.

"எஞ்சினீயர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, அரசு வழி காணவேண்டும்" என்று தலைமை அமைச்சரிடம் முறையிடப்பட்டிருக்கிறது.

## காதில் விழுந்தது!

"காந்தி பிறந்த நாளன்று குமரி முனையில் ஆரம்பித்து—நேரு பிறந்த நாளான நேற்று சென்னை வந்த 'கால்நடைக் குழு'வினர், வழியில் என்னென்ன பணிகளைச் செய்துகொண்டே வந்தனர்?"

"நடந்தே வந்தனர்; இதுதான் சிறப்பு; வேறென்ன வேண்டும்?"

"காந்தியடிகள் நடந்ததில் ஒரு கருத்து உண்டு; விநோபா பாவேயின் பயணத்தில் ஒரு வேலை முக்கியம்; ஆனால், 'நடப்பதற்காக' என்று நடந்துவந்தவர்களின் நோக்கம் என்ன?"

"நேற்றையக் கூட்டத்தில் அதுபற்றி யாரும் பேசக் காணோம்!"

"அப்படியானால், பயணம், 'அரசியல் அடிப்படையில் தான்' என்று ஆணி அடித்தாற்போல் பேசிய பக்த வத்சலத்தின் மீது 'பாய்வதில்' என்ன நியாயம் இருக்கிறது?"

## 'புதுடில்லி—வேலை வாய்ப்புத் தேடித் தரும் இடமா?'

### புதிய அமைச்சர்கள் நியமனம்—நாடாளுமன்றத்தில் கடும் எதிர்ப்பு

வழக்கத்துக்கு விரோதமாகப் பலத்த எதிர்ப்பு ஆரவாரங்களுக்கிடையே நாடாளுமன்றத்தில் புதிய துணை அமைச்சர்கள் அறிமுகம் செய்துவைக்கப்பட்டிருக்கிறார்கள்!

பொதுவாகப் புதிதாக நியமனமாகிப் பாராளுமன்றத்துக்கு வரும் முதல் நாளன்று, அமைச்சர்கள், எல்லாத் தரப்பினராலும் வரவேற்கப்படுவது வழக்கம்.

"புதுடில்லி, இந்த நாட்டின் மிகப் பெரிய வேலைவாய்ப்பு தேடித் தரும் இடமாக மாறிக் கொண்டிருக்கிறது"

என்று பி. சோ. கட்சித் தலைவர் நாத்பாய பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"நாட்டின் இன்றையச் சூழ்நிலையில் புதிய நியமனங்கள் பொருத்தமற்றது—தேவையில்லாதது"

என்று அவர் மேலும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

"கட்சியிலிருந்து சிலர் வெளியேறிவிடுவதைத் தவிர்க்க இந்தப் புதிய சேர்க்கைகளா?"

என அவர் மேலும் வினவியபோது உறுப்பினர்கள் தரப்பிலிருந்து, 'இதை இன்னும் விரிவுபடுத்திப் பேசுங்கள்' என்ற ஆரவாரக் குரல் எழுந்தது!

"ஏற்கனவே வேலை ஏதும் இல்லாமல்—ஆனால் 'காபினட்' அந்தஸ்து பெற்ற சத்தியநாராயண் சின்கா அப்படியே தொடர்ந்து இருக்கும்போது புதிதாக நான்கு அமைச்சர்கள் எதற்கு?"

என, ச. சோ. கட்சி உறுப்பினர் மது லிமாயி விளக்கம் கேட்டார்.

## மேற்கு வங்க நிலைமை: நவ. 23-ல் திருப்புமுனையைப் பெறக்கூடும்?

### 'கவர்னருக்குள்ள அதிகாரம்' பற்றிக் கருத்து வேறுபாடு வலுக்கிறது!

### முதலமைச்சருக்கு ஆளுநர் முடங்கல்

அரசியல் வட்டாரங்கள் வியப்பும் ஆர்வமும் காட்டிய மேற்கு வங்கக் கவர்னரின் கடிதம், 'நவம்பர் 23-ல் சட்டமன்றக் கூட்டத்தினைக் கூட்டவும்' என்ற வேண்டுகோளினை, மாநில முதல்வருக்கு விடுத்திருப்பதாகத் தெரியவந்திருக்கிறது.

"ஐக்கிய முன்னணி அமைச்சரவைக்குப் போதுமான பெரும்பான்மை குறைந்திருப்பதாகத் தெரிகிறது; இந்த நிலையில், டிசம்பர் 18-ந் தேதி வரை சட்டமன்றக் கூட்டத்தினைத் தள்ளிவைக்க முடியாது; எதுவே, நவ. 23-ந் தேதியன்றே கூடும் சட்டமன்றத்தில், அமைச்சரவைப் பலத்தினை பரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்ளவும்"

என்ற கருத்தில் கவர்னரின் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

கவர்னரின் கடிதம் பற்றி ஆலோசிக்க அமைச்சரவையின் அவசரக் கூட்டம் நடைபெறுவதற்காக, சுற்றுப்பயணத்தில் இருக்கும் அமைச்சர்களெல்லாம், உடன் தலைநகருக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்!

கவர்னர்களின் கூட்டம் முடிந்தவுடன், மேற்கு வங்கக் கவர்னர் தர்மவீரா, உடனடியாகப் புதுடில்லியிலிருந்து கல்கத்தாவுக்குத் திரும்பியிருப்பதும், கவர்னர்கள் மாநாட்டில் இந்திரா பேசிய கருத்

(4-ம் பககம் பார்க்க)

# தத்துவம் மட்டும் இருந்தால் போதுமா?

## மனித குலத்துக்கு ஆலயங்கள் ஆற்றிடும் பணி என்ன?

### அண்ணாமலையார் கோயிலில் முதலமைச்சர் அண்ணா உரை

“ஆலயம் என்பது வணங்க மட்டுமல்ல; மற்ற பல துறைகளில் ஈடுபட்டு மனித சமுதாயத்திற்குப் பயன்படும் காரியங்கள் ஆற்ற வேண்டும்! ‘இப்படிச் செய்தால் ஆண்டவனுக்கு அடுக்காது’ என்று யாரும் எண்ணாதீர்கள்!

“உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசினால்தான் ஆண்டவனுக்கு அடுக்காது! ‘அப்படிப் பேசுவதுதான் சரியானது’ என்று கருதுவானானால், அவன் ஆண்டவனாக இருக்கமாட்டான்!

“கிறித்துவ மதத்தினர் நம்மைப்போலல்லர்; அவர்கள் ஞாயிற்றுக்கிழமை மட்டுமே கோயிலுக்குப் போகிறவர்கள்; ஆனால் நாமோ நாள்தோறும்—வேளைதோறும் போகிறவர்கள்!

“கிறித்துவர்கள் பல அறநிலையங்களை நிறுவி, வெளிநாடுகளிலும் சென்று நடத்துகிறார்கள்! ஜெர்மனியிலிருந்து வந்து அவர்கள் நமது ஊர்களில் மருத்துவமனை நிறுவி தொழுநோயாளிகளைக் குணப்படுத்துகிறார்கள்! ஆனால் நாமோ, இன்னும் தொழுநோயாளிகளைக் கோயில்களுக்கு முன்னால் உட்காரவைத்துக் கொண்டிருக்கிறோம்! கிறித்துவர்கள் மனித இனத்துக்குச் செய்யும் தொண்டு மிகவும் போற்றப்பட வேண்டியவை!

“நம்மைப்போல் தத்துவவாதிகள் உலகில் வேறு யாரும் இல்லை! ‘எல்லோரும் இன்புற்றிருப்பதுவே அன்றி வேறொன்றறியேன் பராபரமே’ என்பதைவிட, வேறு என்ன தத்துவம் வேண்டும்?

“ஆனால், கிறித்துவர்களைப்போல் நாம் என்ன அறநிலையம் நிறுவினோம்? வெளிநாட்டிற்கு என்ன செய்தோம்?—என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்!

“இராமகிருஷ்ண பரமஹம்சருக்குப் பிறகு இன்னும் யாரும் அறநிலையம் நிறுவியதாக நான் அறியேன்!

“ஆகவே, இந்த ஆலயத் திருப்பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் தொண்டர் படை ஒன்று நிறுவ வேண்டும்; அந்தப் படை பலவகையில் மக்களுக்குப் பணிபுரியலாம்; வீடுகள் தீப்பற்றிக்கொண்டால் தீயணைக்கும் படையாக உதவலாம்; ஒரு கிராமத்திலே பஞ்சம் என்றால் நிவாரண வேலையில் ஈடுபடலாம்; எங்காவது நோய் பரவியுள்ளதென்றால் ‘கோயில் தொண்டர் படையைச் சேர்ந்த மூன்று மருத்துவர்கள் உதவினார்கள்’ என்று சொல்லும்படிப் பணிபுரியலாம்!

“இப்படிப்பட்ட பணிகளைக் கோயில்கள் மேற்கொண்டால் நான்கூட ஏன் குறை சொல்லப்போகிறேன்?

“இவைகளைச் செய்ய சட்டத்தில் எவ்வளவு தூரம் இடமிருக்கிறது—என்பதை அறநிலையத் துறை ஆணையர் ஆராய்ந்துபார்க்க வேண்டும்; கோயில் நிர்வாகிகள், இவை எவ்வளவு தூரம் நடைமுறைக்கு வரும் என்று பார்க்கவேண்டும்.

“இத்தகையப் பணிகளைச் செய்துவிட்டு அதற்கான வெற்றிக்குப் பரிசாக எத்தனை கோப்பைகளைத் தர அழைத்தாலும் நான் வரத் தயாராக இருக்கிறேன்”

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், திருவண்ணாமலை கோயில் நிர்வாகத்தினர் நடத்திய கடைகள் திறப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திருவண்ணாமலையில், அண்ணாமலையார் கோயில் நிர்வாகக் குழு கட்டியுள்ள ஏழு கடை வரிசைகளை 12—11—67 ஞாயிறு அன்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் திறந்துவைத்தார்கள்.

விழாவிற்கு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி தலைமைவகித்தார்.

அறநிலையத்துறை ஆணையர் திரு. இராதாகிருட்டினன், ‘இந்த ஆண்டில் மிகவும் தூய்மையாக அண்ணாமலையார் ஆலயம் இருந்ததாகக் கருதி’ சுழற்கோப்பையைப் பரிசாக அளிக்கும்படி முதலமைச்சரை வேண்டிக் கொண்டார்.

அதனை அளித்து அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

#### மூன்று சீரிய பணிகள்

“கோயில் பணிகள் செம்மையாக நடந்தேற—அதற்கான செலவை ஈடுகட்ட இத்தகைய கடைகளைக் கட்டி வாடகைக்கு விடுகிறீர்கள்; இன்று திறப்பு விழாவும் நடத்துகிறீர்கள்; இதில் கலந்துகொள்வதிலே மகிழ்கிறேன்.

இந்த விழாவில் மூன்று வகையான சிறப்புக்கள் இருப்பதாக நான் கருதுகிறேன்; ஒன்று—நான் வந்திருப்பது! இரண்டு—கோயில் நிர்வாகத்தினர் கடைகள் கட்டிவிட்டிருப்பது! மற்றொன்று—இந்த ஆலயம் தூய்மையாக இருப்பதாகப் பாராட்டப்பட்டது!

நான் இந்த ஆலய விழாவிற்கு வந்ததே ஆச்சரியம்! ஆலய நிர்வாகத்தினர் பயன்தரும் வகையில் செலவிட்டுக் கடைகள் கட்டிவிட்டிருப்பதும் ஆச்சரியம்தான்!

ஆண்டவன் சன்னதி என்றாலே ‘தூய்மையான இடம்’ என்பதுதான் பொருள்! இந்த ஆலயம் தூய்மையாக—சுகாதார முறைப்படி இந்த ஆண்டு இருந்தது என்பதற்காகச் சுழற்கோப்பை பரிசளிக்கப்படுவதும் ஆச்சரியமான காரியந்தான்!

#### சனநாயகம் சிறக்க...!

அறநிலையப் பாதுகாப்புத் துறையானாலும் சரி—ஆலய நிர்வாகத் துறையானாலும் சரி—யார் எந்தத் துறையில் பொறுப்பேற்றுக் கொண்டாலும், அவற்றைச் செம்மைப்படுத்த வேண்டியது அவர்களது கடமையாகும்.

சனநாயகத்தில், ‘எல்லாவற்றையும் அரசே கவனிக்கும்’ என்று இருந்துவிடக்கூடாது!

தற்போது மன்னர் ஆட்சியாக இருந்தால், ‘எல்லாவற்றையும் மன்னரே பார்த்துக் கொள்வார்’ என்று இருந்துவிடலாம்! ஆனால் இன்று நடைபெறுவது மக்கள் ஆட்சி! அவரவர்க்கு உள்ள கடமையை நிச்சயம் நிறைவேற்றியாக வேண்டும்; அப்போதுதான் சனநாயகம் சிறக்கும்!

#### பொறுப்பை உணர்ந்து செயல்படுவது சிறந்தது!

விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்கள்—ஆலயத்தில் பணிபுரிபவர்கள் கூட்டுறவு, பஞ்சாயத்து, நகராட்சி இப்படி எந்தத் துறையானாலும் அவற்றில் ஈடுபட்டிருப்பவர்கள், தங்கள் பொறுப்புக்களை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும்.

ஆலயப் பணியில் உள்ளவர்கள் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தி வைத்திருக்க வேண்டும்; அப்போதுதான் ஆலயத்திற்கும் சிறப்பு—வருபவர்களுக்கும் வசதி!

இப்போதெல்லாம் செல்வர்கள் மட்டுமன்றி, ஏழை—நடுத்தர மக்களும் கோயில்களுக்கு வருவதுடன், நிதி கொடுத்தும் உதவுகிறார்கள்; இன்னும் கொடுக்கும் நிலையிலும் இருக்கிறார்கள்; ஆகவே, அத்தகைய மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் வருமானத்தைச் செலவிட்டு, ஆலயங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

#### தொண்டுக்கு இலக்கணம்

ஆலய நிர்வாகத்தினர், ‘எல்லாவற்றையும் மேலே இருப்பவர் பார்த்துக் கொள்வார்’ என்று இருந்துவிடக் கூடாது!

விவாதத்திற்காக எடுத்துக் கொண்டாலும், ஆண்டவனைக் கண்டவர்கள் சொன்னதில்லை—சொன்னவர்கள் கண்டதுமில்லை! அது, அவரவர்களின் நம்பிக்கைக்குரிய ஒன்றாகும். ஆகவே, இருப்பதை நல்லபடி நிர்வகித்து வரவேண்டியதே நாம் ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டாகக் கருதவேண்டும்.

‘ஆலய நிர்வாகம் சரியில்லை’ என்பதற்காகத்தான், ‘தேவாலயங்களின் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும்; வருமானத்தைக் கணக்கில் வைக்கவேண்டும்’ என்பதை நெறிப்படுத்த அறநிலையப் பாதுகாப்புத்துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. நிர்வாகத்தில் ஒழுக்கம் குறைந்ததால்தான், இந்தத்துறை ஏற்படுத்தப்பட்டது.

‘ஆலயத்திற்கு க்கூடகணக்கா?’ என்ற கேள்வி மறைந்து, இன்று, ஒழுங்குமுறை ஏற்பட இந்தத் துறையினர் பணியாற்றுகிறார்கள்!

ஆலயங்களை நிர்வகிப்பவர்கள் பழிக்கு ஆளாகாமல் இருக்கத்தான் அறநிலையத் துறை அதிகாரிகள் இருக்கிறார்கள்!

தர்மகர்த்தாக்களுக்கு நல்ல பெயர் ஏற்படவே அறநிலைத் துறையினர் உதவுகிறார்கள்!

இவ்வளவும் கூறக் காரணம், சிலர், ‘எங்கள் கோயிலில் குறைந்த வருமானம்தானே—அதற்குமா அதிகாரி—தேவையில்லை’ எனக் கூறுவதால்தான்!

#### ‘கோயில் பூனை’கள்!

‘கோவைக் கிழார்’ என்று அழைக்கப்படும் சி. எம். இராமச்சந்திரன் (செட்டியார்), அறநிலையத் துறையின் முதல் ஆணையராக இருந்தவர்; அவரைப் போன்ற பக்திமான்—சைவசித்தாந்தத்தில் தேர்ச்சி பெற்றவர் வேறு யாரும் இருக்க முடியாது.

அவரே கோயில்களில் நடைபெறும் கேடுபாடுகள் குறித்து, ‘கோயில் பூனைகள்’ என்னும் நூல் எழுதியுள்ளார்!

‘எந்தெந்தக் கோயில் நகைகள் யார்யார் வீட்டிற்குப் போயின’ என்பதையும், அப்படிப் போய்த் திரும்பிய நகைகளில், ‘60 முத்துக்கள் கொண்ட முத்தாரம் திரும்பி வரும்போது அதில் இருந்தவை சொத்தை முத்து 4—நல்ல முத்து 6’ என்கிற கணக்குகளையும் அந்தப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆகையால்தான், கோயில் சொத்துக்கள் நல்ல முறையில் பாதுகாக்க இத்தகைய அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

#### வேறு வகையான பலன் கிடைக்க இடந்தராதீர்!

தமிழர்கள் எப்போதும் புகழோடு வாழ்வதைத்தான் விரும்புவார்கள். ‘ஈதல், இசைபட வாழ்தலே உயிருக்கு ஊதியம்’ என்று திருவள்ளுவர் கூறியிருக்கிறார். ஆகவே, உயிருக்கு வேண்டிய உணவு புகழாகும். சாதாரண சாப்பாடு வாய் வழியாகச் சாப்பிடுகிறோம்—இது வயிற்றுக்கு!

‘புகழ்’ என்னும் உணவு, காது வழியாகச் செல்வது!

ஆகவே, இந்த ஆலயத்தில் பணிபுரிவோர், ‘ஆண்டவனுக்குப் பணி செய்தால் நல்லது கிடைக்கும்’ என்று நம்பிப் பணி செய்ய வேண்டும்.

இந்த நம்பிக்கையோடு மட்டும் இருந்தால் பலன் கிடைக்கும்; இதைவிட்டு, மற்ற வகையான காரியங்களில் ஈடுபட்டால் பலனும் வேறு வகையாகத்தான் இருக்கும்!

சாதாரண கடைக்காரர்கள் கடைக் கணக்கிலே தவறு செய்தால், கோர்ட்டுக்கு மட்டும்தான் பதில் சொல்ல வேண்டும்; ஆனால், கோயில் பணியிலே ஈடுபட்டிருப்பவர்கள் தவறு செய்தால், அறநிலைய ஆணையரான இந்த இராதாகிருட்டினனுக்கு மட்டுமின்றி, மேலே உள்ள இராதா

(3 ம் பக்கம் பார்க்க)

---

## அரசியல்வாதிகளின் கடமை—

# அண்ணா வலியுறுத்தல்

“இப்போது அரசியல்வாதிகளுக்கு அதிக மதிப்புக் கொடுக்கிறார்கள்; ஆனால், தொழில் நிபுணர்கள்—விவசாயிகள்—பாட்டாளிகள்—கல்வி நிபுணர்கள் ஆகியோருக்கு இந்த மதிப்பைச் சமூகம் கொடுப்பது இல்லை; இது வருந்தத்தக்கது!

“மருத்துவர் நோயைக் குணப்படுத்தும் மருந்தைக் கொடுக்கிறார்; பொறியாளர் பாலத்தை அமைத்துக் கொடுக்கிறார்; அரசியல்வாதிகளால் இவைகளில் எதையும் செய்யமுடியாது! நிபுணர்களை இணைத்துச் செயல்படச் செய்வதுதான் அரசியல்வாதிகளின் கடமையாகும்!

“எனவே, அரசியல்வாதிகளைவிட இவர்களுக்கு அதிக மதிப்பு அளிக்கப்பட வேண்டும். அந்த நிலை நம் நாட்டில் எப்போது ஏற்படுகிறதோ அப்போதுதான் எல்லாத் தரப்பினரும் ஒன்றாக வளர்ந்துவிட்டார்கள் என்று பொருள்!

“நான் அரசியல்வாதிதான்; இருந்தாலும், இந்தக் கருத்தை நான் சொல்லக் காரணம், அரசியல்வாதியாக இல்லாவிட்டாலும், ‘என்னால் சில தொண்டுகளைச் செய்யமுடியும்’ என்று நான் கருதுவதே ஆகும்”

என்று அறிஞர் அண்ணா அவர்கள், திருவல்லிக்கேணியில் டாக்டர் இலட்சுமணசாமியின் படத் திறப்பு விழாவில் உரையாற்றுகையில் வலியுறுத்தினார்.

---

## மாணவர்களின் உணர்ச்சிக்குத்

# தடை போடாதீர்!

### ஆசிரியர்கட்கு அண்ணா அறிவுறுத்தல்

‘ஆசிரியர்களுக்குப் பல கடமைகள் உண்டு; அவர்களுக்கு நான் விடுக்கும் வேண்டுகோள் இதுதான்—இப்போதுள்ள மாணவர்கள், பழங்கால மாணவர்களைவிட உணர்ச்சிமிக்கவர்கள்! தமிழகத்தில் மட்டும் அல்ல—உலகம் எங்குமே இப்போது மாணவர்கள், உணர்ச்சிப்பிழம்பாக இருக்கிறார்கள்! எனவே அவர்கள், நிதானமாக முன்போல் இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது!

“முன்பெல்லாம் மாணவர்கள், ‘நம்மால் எந்தக் காரியமும் சாதிக்க முடியாது’ என்று எண்ணிக்கொண்டு பேசாமல், நிதானமாக நடந்துகொள்வார்கள்; ஆனால் இப்போது மாணவர்கள், எந்தக் காரியத்தையும், ‘இப்போதே நான் அதைச் செய்து முடிப்பேன்; இந்தக் காரியத்தை என்னால் ஏன் செய்ய முடியாது’ என்று நினைக்கிறார்கள்!

“இது, வேகம் நிறைந்த காலம்; எனவே, மாணவர்களின் உணர்ச்சிகளுக்கு ஆசிரியர்கள் தடைபோடக் கூடாது!

“அதே நேரத்தில், உணர்ச்சிவேகத்தில் மாணவர்கள் எதிலும் போய் மோதிக்கொள்ளாமலும் ஆசிரியர்கள் கவனித்துக் கொள்ள வேண்டும். இந்தப் பணியில் எவ்விதத் தொல்லைகள் நேர்ந்தாலும் ஆசிரியர்கள், அதைத் தாங்கிக்கொள்ள வேண்டும்.”

—[சென்னை-திருவல்லிக்கேணி தேசிய ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில்]

# இலங்கையிலிருந்துதாயகம்திரும்பும் அகதிகளுக்குத் தொழில் வசதி

## இராமநாதபுர மாவட்டத்தில் தொழில்கள் துவக்கத் திட்டம்

மதுரை, நவ. 14—

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக வேலை வாய்ப்புக்களைப் பெருக்க கிழக்கு இராமநாதபுரம மாவட்டத்தில் 6 தொழிற்சாலை துவங்கத் திட்டமிடப்பட்டு வருகிறது.

மத்திய அரசின் முழு உதவியுடன் இத்தொழில்களை துவக்க உத்தேசிக்கப்படுகிறது. இதற்கான திட்டமொன்றை மாநில அரசுக்கு இராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் ஏ. எஸ். வெங்கட்ராமன் அனுப்பியுள்ளார்.

இராமேசுவரம் தீவுப் பகுதியில் கிடைக்கும் சுண்ணும்புப் படிவங்களைக் கொண்டு பெரிய சிமெண்டுத் தொழிற்சாலை ஒன்றும், மானு மதுரைக்கு அருகில் நடுத்தர சிமெண்டுத் தொழிற்சாலை ஒன்றும் அமைக்க அவர் யோசனை கூறியுள்ளார்.

"மண்டபத்தில் சோப்புத் தயாரிக்கும் தொழிற்சாலையும், மீன் பதனிடும் தொழிற்சாலையும், நவீன கயிறு தயாரிப்புத் தொழிற்சாலையும் அமைக்கலாம்" என்று அரசுக்கு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

"சிவகங்கை, மானுமதுரை பகுதியில் கிடைக்கும் தாதுவளத்தைக் கொண்டு மானுமதுரை பகுதியில் பென்சில் தயாரிப்புத் தொழிற்சாலை, வர்ணத் தயாரிப்புத் தொழிற்சாலை, செங்கல் ஓடு தயாரிப்புத் தொழிற்சாலை ஆகியவற்றை அமைக்கலாம்" என்றும் அவர் யோசனை கூறியுள்ளார்.

இவை தவிர, 'மானுமதுரைக்கு அருகில் சுமார் 4100 ஏக்கர் நிலத்தில் விவசாயத் தொழிலாளருக்கு வேலையளிக்க விவசாயத் தோட்டப் பண்ணை ஒன்றை அமைக்கலாம்' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நெல்லை தனித் தமிழ் இலக்கியக் கழகம்

### கட்டுரைப் போட்டி அறிவிப்பு

நெல்லைத் தனித் தமிழ் இலக்கியக் கழகச் சார்பில் இவ்வாண்டு 'பாரதிதாசன் பாடல்களில் மரபும் புதுமையும்' என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி நடைபெறும்.

தமிழகத்தின் முப்பெரும் பல்கலைக் கழகங்களைச் சார்ந்த கல்லூரிகளில் கல்வி பயிலும் ஆண்—பெண் இருபாலரும் போட்டியில் கலந்துகொள்ளும தகுதியுடையவராவர்; இலக்கியத் தேர்ச்சி முறையில்—திறனாய்வு நோக்கில் கட்டுரை அமையப்பெற வேண்டும்; எழுத்தோவியம் முழு வெள்ளைத் தாளில் ஐம்பது பக்கங்களுக்குக் குறையாமலும் அறுபது பக்கங்களுக்கு மிகாமலும் இருத்தல் இன்றியமையாதது; ஆய்வு கட்டுரையினை மாணவர், தாம் கல்வி பயிலும் கல்லூரி முதல்வர் அல்லது தமிழ்ப் பேராசிரியர் கையொப்பத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

தனித் தாளில் மாணவர் பெயர் — பயிலும் வகுப்பு — கல்லூரிப் பெயர் — மாணவரின் இல்ல முகவரி ஆகியவற்றைத் தெளிவாகக் குறித்தனுப்பவேண்டும்.

ஆராய்ச்சிக் கட்டுரையினை அனுப்புவதற்கான இறுதி நாள்: 31—12—67.

அனுப்பவேண்டிய முகவரி:—

பா. வளன்அரசு எம் ஏ., தலைவர்
தனித்தமிழ் இலக்கியக் கழகம்,
35, சிவன்கோயில் வடக்கு விதி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி-2.

சிறந்த மூன்று கட்டுரைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பெறும். முதற் பரிசு பெறும் தகுதி பொருந்திய எழுத்தோவியத்தை உருவாக்கும் மாணவர்க்குத் தனிப் பரிசாக தங்கப் பதக்கமும், அவர் சார்ந்த கல்லூரிக்கு வெள்ளி உருள் கலனும் வழங்கப்பெறும்.

இரண்டாவது மூன்றுவது பரிசுகளாக முறையே முப்பது, இருபது ரூபாய் மதிப்புள்ள தமிழ் நூல்கள் அளிக்கப்பெறும். பரிசுகள், 1968 சனவரித் திங்களில் நெல்லையில் கழகத்தின் சார்பில் நிகழவிருக்கும் தமிழ்த் திருவிழாவில் வழங்கப் பெறும்.

வெற்றி வாகை சூடும் மாணவர் உருள் கலனைப் பெற்றுச் செல்வதற்குத் தாம் பயிலும் கல்லூரி முதல்வரிடமிருந்து உரிமைச் சீட்டு ஒன்று வாங்கிவருதல் வேண்டும். பரிசாகப் பெற்றுச் செல்லும் உருள் கலனை மாணவர் சார்ந்த கல்லூரி முதல்வர் அவர்கள், தனித்தமிழ் இலக்கியக் கழகத் தலைவர் முகவரிக்கு 14—1—69-க்குள் அனுப்பித் தரவேண்டும்.

பரிசு பெறும் கட்டுரைகளை வெளியிடும் முதல் உரிமை கழகத்தையே சாரும். போட்டி முடிவுகள் நாளிதழ்களில் வெளியிடப் பெறும்.

### பேச்சாளர் முகவரி:

பெ. பெரும்பாக்கன்,
பாரதிபுரம்,
லக்கியம்பட்டி அஞ்சல்,
தருமபுரி-3.

## மணப்பாறைக்கு கலைக் கல்லூரி

### சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் முயற்சி

மணப்பாறை சுற்று வட்டாரப் பொதுமக்கள் — வியாபாரிகள் — பல கட்சியினர் ஆகியோரின் நீண்ட நாளைய வேண்டுகோளுக்கிணங்க, குளித்தலைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மா. கந்தசாமி பி ஏ.பி.எல்., 24—10—67-ல் ஆலோசனைக் கூட்டம் நடத்தினுர்.

கூட்டத்திற்கு மணப்பாறை உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் இராமநாதன் பி.ஏ.பி.டி தலைமைவகித்தார்; அழைப்பிற்கிணங்கி தாசில்தார், யூனியன் ஆணையர், ஆசிரியர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், வியாபாரிகள், பல கட்சியினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திரு. கந்தசாமி பி ஏ.பி.எல்., கூட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசினுர்.

கூட்டத்தில் பேசிய ஒவ்வொருவரும், தத்தம் கருத்தைத் தெரிவிக்கையில், 'திருச்சி, திண்டுக்கல், மதுரை, புதுக்கோட்டை ஆகிய பகுதிகளுக்கிடையில் மணப்பாறை 35 மைல் சுற்றளவுக்கிடையில் உள்ள ஒரு முக்கிய மத்திய இடமாக இருப்பதால், கல்லூரி அமைப்பது மிக மிக அவசியம்; இதனுல் மாணவர்களுக்கு இட நெருக்கடி குறைவதுடன் சிரமம் குறைவு; பெற்றோர்களுக்கும் செலவும் குறைவு; இந்தக் காரியத்தை எவ்விதத் தடை வரினும் விடா முயற்சியுடன் வெற்றிகரமாக முடிக்க வேண்டும்; இதற்கு எல்லாத் தரப்பினரிடமிருந்தும் நல்லாதரவு கிடைக்கும்' என்று வலியுறுத்தினர்.

கல்லூரி அமைப்புச் சம்பந்தமாகத் தமிழகத்தின் தொழில் பிரமுகரான கருமுத்து தியாகராச (செட்டியார்) அவர்களையும், திருச்சி மாட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும் சந்தித்து உரையாட குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

தூதுக் குழுவின் நடவடிக்கைகள் முடிந்தபின் தொடர்ந்து அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளச் சட்டமன்ற உறுப்பினர் மா. கந்தசாமி பி.ஏ.,பி.எல். அவர்களுக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டது.

இறுதியில், திரு. கந்தசாமி எம்.எல்.ஏ. நன்றி கூறினுர்.


# வலியா? ஜலதோஷமா?





பத்து சக்திமிக்க மருந்துகள் சேர்ந்தது

# அமிர்தாஞ்சனம்

உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கிறது

சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் கொண்ட அமிர்தாஞ்சனம் வலிகளைப் போக்கி ஜலதோஷத்தை நீக்குவதற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது. எழுபது ஆண்டுகளாக லட்சக் கணக்கான குடும்பங்களில் பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி அது.

**வலிகளுக்கு:** தலைவலி, தலைவலி, சுளுக்கு, அல்லது மூட்டு வலி எதுவாக இருந்தாலும், வலியுள்ள இடத்தில் சிறிது அமிர்தாஞ்சனம் தடவுங்கள். சில நிமிடங்களில் நிவாரணம் ஏற்படுவதை உணர்வீர்கள்!

**ஜலதோஷத்துக்கும், மார்புச் சளிக்கும்:** சாதாரண ஜலதோஷமானுல் மூக்கின் உட்புறத்திலும் மூக்கின் கீழும் அமிர்தாஞ்சனம் தடவுங்கள்; அல்லது சிறிதளவு அமிர்தாஞ்சனம் எடுத்து வெந்நீரில் இட்டு, ஆவியை சுவாசியுங்கள். மார்புச் சளியானுல், மார்பில் அமிர்தாஞ்சனம் தடவுங்கள். மிகமிக விரைவில் நல்ல நிவாரணம் ஏற்படுவதைக் காண்பீர்கள்.

ஒவ்வொரு முறை பயன் படுத்துவதற்கும் சிறிதளவு அமிர்தாஞ்சனமே போதும்; ஆகவே ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்துக்கு மாதக் கணக்கில் வரும். அமிர்தாஞ்சனத்தை எப்பொழுதும் கையோடு வைத்திருங்கள்.

அமிர்தாஞ்சனம் கையடக்கமான, குறைந்த விலை டின்களிலும் கிடைக்கிறது.




அமிர்தாஞ்சன் லிமிடெட்,
மதராஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி.

AM/3768


## தத்துவம் மட்டும் இருந்தால்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கிருட்டினனுக்கும் பதில் சொல்லியாக வேண்டும்!

### முயற்சி செய்யுங்கள்!

இங்கே தரப்பட்ட கோப்பை சென்ற ஆண்டு சென்னிமலை முருகன் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டது. சுழற் கோப்பையாகையால் இந்த ஆண்டு நீங்கள் பெற்றீர்கள். அடுத்த ஆண்டும் நீங்களே பெற முயற்சி செய்ய வேண்டும்.

### அகத்தூய்மை அவசியம்!

கோயில்கள் புறத்தூய்மையோடு மட்டுமல்ல -- அகத்தூய்மையோடும் இருக்க வேண்டியவை! ஆகவே, அவற்றை முதலில் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்!

இப்படி ஆலயச் சார்பில் கடைகள் கட்டித் திறப்பதுபோல், 20 ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தியிருந்தால் பலர் கோபப்பட்டிருப்பாகள்! ஆனுல் இன்று அதை வரவேற்கிறுர்கள்!

ஏசுநாதர்கூட ஜெருசலேம் நகரக் கோயில் அருகில் கடைகள் வைத்திருந்ததை எதிர்த்து அப்புறப்படுத்தியதாகக் கூறுகிறுர்கள்!

ஆனுல் இன்றையத்தினம், நிலைமை அப்படி இல்லை; இதைவிட இன்னும் ஒரு படி முன்னுக்குப் போக வேண்டும்.

### காலம் மாறிப் போச்சு!

நான் பல ஆண்டுகளுக்கு முன்னுலேயே சொல்லியிருக்கிறேன்—'பழனி கோயில் வருமானத்தில்—பழனி ஆண்டவருக்குச் செலவு போக—ஒரு கல்லூரி அமைத்து நடத்தலாம்' என்று! அன்று அதற்குப் பலர் எதிர்ப்புத் தெரிவித்தார்கள்! ஆனுல் இன்று அதே நிர்வாகத்தினர், ஒரு கலைக் கல்லூரியை நடத்திவருவதுடன், 'மேலும் ஒரு கல்லூரி நிறுவலாமா' என்றும் என்னிடம் வந்து யோசனை கேட்டுவிட்டுப் போயிருக்கிறுர்கள்!

முற்காலத்தில் பழம்பெரும் கோயில்களிலேயே கல்விக் கூடம், மருத்துவக் கூடம் வைத்து நடத்தியதாக இலக்கியங்கள் கூறுகின்றன! இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுவதில் தவறேதுமில்லை!

குலோத்துங்க சோழன் காலத்தில் அவனது பாட்டியார் குந்தவி பிராட்டியார் என்பவர், காஞ்சீபுரத்தில் வந்து தங்கி, தனக்குரிய சொத்தில் மருத்துவமனை ஒன்றை கோயிலில் நடத்தியதாக கல்வெட்டுக்கள் கூறுகின்றன; இதை நாம் உணரவேண்டும்."

## உடுமலை மின்கழக கணக்காயர் சங்கம்

தமிழ் நாடு மின் கழகக் கணக்காயர் சங்கத்தின் உடுமலை கிளை துவக்க விழா, 4—11—67 அன்று திரு. வெங்கடாசலம் தலைமையில் நடைபெற்றது.

செயலாளராக ஞா. சுந்தரம்; துணைச் செயலாளராக கனகராசன்; பொருளாளராக கோவிந்தசாமி; பொதுக்குழு உறுப்பினராக பிலிப்; செயற்குழு உறுப்பினர்களாக தண்டபாணி, இலட்சுமி நாராயணன், வெங்கடாசலம, இராமசுப்பிரமணி, கோவிந்தராசன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## 'நவசக்தி'மீது வழக்கு

### மாநகராட்சி உறுப்பினர் கரிகாலன் தொடர்ந்தார்

சென்னை, நவ. 9—

11—11—67 'நவ சக்தி' இதழில் சென்னை 66-வது வட்ட மாநகராட்சி உறுப்பினர் கரிகாலனைப் பற்றி அவதூருன செய்தி வெளியிட்டதாக அந்த இதழின் வெளியீட்டாளர் தனுஷ்கோடி —கௌரவ ஆசிரியர் ஈ. வெ. கி. சம்பத்—திருமதி ருக்மணி ஆகியோர்மீது கரிகாலன் மானநஷ்ட வழக்குத் தொடர்ந்திருக்கிறுர்.

ஐந்தாவது மாகாண மாஜிஸ்திரேட் இவ்வழக்கை ஏற்று, 'நவ சக்தி' வெளியீட்டாளர்—கௌரவ ஆசிரியர், மற்றும் திருமதி ருக்மணி ஆகியோர் 25—11—67 அன்று நீதிமன்றத்துக்கு வரவேண்டுமென்று உத்தரவிட்டார்.

### தமிழக அரசுக்கு நன்றி

"7—11—67 வரையில் தங்கசாலையிலிருந்து ஓரக்காடு வழியாக வந்துகொண்டிருந்த 58-ஏ பஸ்ஸை தொகுதி மக்களின் நலன் கருதி அருமந்தைக் கிராமக் கூட்டுச் சாலை வரையில் விடவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க 8—11—67 முதல் மேற்கண்ட வழியாகப் பஸ் விடப்பட்டது.

"கோரிக்கையை ஏற்று ஆவன செய்த தமிழக அரசுப் போக்குவரத்து இயக்குநர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் தொகுதி மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று பொன்னேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பா. நாகலிங்கம் அறிவிக்கிறுர்.

# மாநகராட்சி நடத்திய நேரு பிறந்த நாள்

## அண்ணா மற்றும் அமைச்சர்கள் பங்கேற்ற குழந்தைகள் விழா

சென்னை, நவ. 15—

நேரு பிறந்த நாள் விழா 'குழந்தைகள் நாளாக'க் கொண்டாடப் பட்டது. இவ்விழா, நேரு விளையாட்டரங்கில்—சென்னை மாநகராட்சி சார்பில் மேயர் இரா. சம்பந்தம் தலைமையில் நடைபெற்றது.

விழாவை கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் துவக்கி வைத்துப் பேசினர்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துச்சாமி விழா மலரை வெளியிட்டார்.

ஆளுநர் உஜ்ஜல் சிங்கின் துணைவியார் சர்தாரிணி உஜ்ஜல் சிங் பரிசுகளை வழங்கினர்.

இறுதியாக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

சென்னை நகரில்உள்ள துவக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றின் மாணவ-மாணவிகள் பங்கேற்ற சில நிகழ்ச்சிகளும், உடற்பயிற்சியும் நடைபெற்றன.

ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவிகள் ஆங்கில முறையில் நடனம் ஆடினார்கள்.

மாநகராட்சித் துவக்கப் பள்ளி மாணவிகள் இந்தியா (மேப்) போன்ற உருவில் நின்று கோலாட்ட நடனம ஆடினார்கள்.

கடைசியில் மாணவிகள் வண்ண உடைகள் அணிந்துவந்து உடற்பயிற்சி மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடத்தினார்கள்.

இவ்விழாவின் துவக்கத்தில் என்.சி.சி., ஏ.சி.சி. படையினைச் சேர்ந்த மாணவ—மாணவியர் வீர நடைபோட்டு அணிவகுத்துச் சென்று மரியாதை செலுத்தினர்; அணிவகுப்பு மரியாதையை இரா. நெடுஞ்செழியன் ஏற்றார்.

### மேயர் வரவேற்பு

மேயர் இரா. சம்பந்தம் வரவேற்புரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது :—

"நாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்டவர் நேரு; 'இந்தியாவின் ஒவ்வொரு குழந்தையும் நல்வாழ்வு வாழ்ந்து சிறந்த குடிமக்களாக ஆக வேண்டுமென்று அவர் விரும்பினார்; அவர் விருப்பம் நிறைவேற இத்தகைய விழாக்கள் துணை செய்யும்."

### இரா. நெடுஞ்செழியன்

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது :—

"சிறப்பாகப் போற்றிப் பாராட்டத்தக்கமுறையில் சென்னை மாநகரின் பள்ளிக்குழந்தைகள் நடத்துகின்ற இந்த அணிவகுப்பு. உள்ளபடியே மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கிறது.

நேரு, உலக சனநாயகவாதிகளில் ஒரு பெரும் தலைவர்; விடுதலை வீரர்; உலக அறிவாளர்களில் தலைசிறந்தவர்; நல்ல எழுத்தாளர்; பேச்சாளர்!

உலக மக்கள் பாராட்டத்தக்க அளவுக்கு இந்தியாவின் பெயரையும் புகழையும் உயர்த்தியவர்!

குழந்தைகளிடத்தில் நல்ல ஆர்வமும் அக்கறையும் கொண்டு திகழ்ந்தார்; சிறுவர் சிறுமியரது ஆற்றல் திறனை—அறிவுத் திறனை—கல்வித் திறனை வளர்க்க வேண்டுமென்று விரும்பினார்! அத்தகையவருக்கு விழா நடத்துகிறோம்; அதையும் குழந்தைகள் விழாவாக நடத்துகிறோம; அதுவும், அவர் பெயரால் அமைந்த இந்த விளையாட்டு அரங்கில் நடத்தி நேருவின் பண்பை—அறிவை—ஆற்றலை நினைவுபடுததுகிறோம் என்ற இச்செய்தி, மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒன்றுகும்.

எனவேதான், இன்று நாம் பூரிப்ம் பெருமையும் அடைகிறோம்.

இத்தகைய ஒரு விழாவிற்கு ஏற்பாடு செய்த மாநகராட்சியினரையும் மற்றவர்களையும் நான் பாராட்டுகிறேன்."

### மா. முத்துசாமி

அமைச்சர் மா. முத்துசாமி பேசும்போது குறிப்பிட்டதாவது :—

"குழந்தைகளே வருங்காலத் தலைவர்கள் என்றும், அவர்கள், 'தேசியச் சொத்து' என்றும் கருதினார் நேரு! குழந்தைகளிடத்தில் அளவற்ற பாசம் கொண்டிருந்தார்!

அவரது பிறந்த நாளை இத்தனைச் சிறப்புடன் கொண்டாட ஏற்பாடு செய்த மாநகராட்சியைப்பாராட்ட வேண்டும்.

குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக இம்மாநகராட்சி செய்து வரும் பணியின் ஒரு பகுதியே இன்றைய விழா!"

### அறிஞர் அண்ணா

'அண்ணா வாழ்க' என்ற பல்லாயிரக்கணக்கானவரின வாழ்த்தொலிக்கிடையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் பேசியதாவது :—

"எதிர்காலத் தலைமுறையினரான குழந்தைகள், 'நல்வாழ்வு பெற வேண்டும்—மகிழ்வு எய்த வேண்டும்' என்ற நோக்கத்துடன் இந்த விழா இங்கே இவ்வளவு சிறப்பாக நடத்தப்படுகிறது.

இந்த விழாவில் நீங்கள் அனைவரும் உங்கள் ஆடல் பாடல்களால் எங்களை மகிழ்ச்சியில் மூழ்கச் செய்தீர்கள்; இதே மகிழ்ச்சியை நீங்களும் பெற்றுத் திளைக்கிறீர்கள்; 'இன்றுபோல் நீங்கள், உங்கள் வாழ்வில் என்றும் மகிழ்ச்சியைப் பெற வேண்டும்' என்று வாழ்த்துகிறேன்.

இவ்வளவு நேரம் இங்கு நீங்கள் கொண்டிருந்த மகிழ்ச்சியை, இந்த மாநிலம் முழுவதிலுமுள்ள குழந்தைகளும் பெறவேண்டும் என்று விரும்புகிறேன். அதற்காக, குழந்தைகளின் உடல் வளம்—மன வளம் ஆகியவைகளைப் பெருக்கும் செயலில் கல்வித்துறை திட்டமிட்டுள்ளது.

இந்த விழாவில் கலந்துகொண்ட குழந்தைகளுக்கு ஆடல் பாடல்களையும் உடற்பயிற்சியையும் கற்றுக்கொடுத்ததன் மூலம் அரிய கருத்துக்களை ஊட்டியிருக்கும் ஆசிரியப் பெருமக்களைப் பாராட்டுகிறேன்.

இந்த விழாவில் பள்ளிச் சிறுர்கள் நடத்திக்காட்டிய ஆடல் பாடல்களையும், இனிய குரலோசையையும் எவரும் மறக்கமுடியாது. இந்தக் குழந்தைகள் நல்லுணர்வும், நல்வாழ்வும் பெற்ற நாட்டின் செல்வங்கள் ஆகவேண்டும் என்று வாழ்த்துகிறேன்."

விழாவை மாநகராட்சியுடன் சேர்ந்து கூட்டாக நடத்திய குழந்தைகள் நலனுக்கான இந்தியக் கழகத்தைச் சார்ந்த எஸ். ஆர். வெங்கட்ராமன் நன்றி கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக: திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி, அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அறிஞர் அச்சகத்தில் (34, [illegible] [illegible] தெரு சென்னை-[illegible]) [illegible] வெளியிடப்படுகிறது

அமைச்சர்

### ஏ. கோவிந்தசாமி

சுற்றுப்பயணம்

நவ. 17 காலை : கடலூர்—சீரணித் துவக்கவிழா; மாலை : ரிஷிவந்கியம — ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; கீழத்தாழனூர்—பள்ளிக் கட்டிடத் திறப்புவிழா.

நவ. 18 காலை 10 மணி : அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பு; மாலை 5 மணி : நெய்குப்பைப் புதூர்—மாநில விதைப் பண்ணையைப் பார்வையிடல்; மாலை 6 மணி : திருச்சி.

நவ. 19 காலை 7-45 மணி : மதுரை; காலை 10 மணி : சிவகங்கை—இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் மாநாடு; இரவு 8 மணி : மதுரை.

நவ. 20 : சென்னை.


## தென்னாற்காடு மாவட்ட

### சீரணிப் படை துவக்க விழா

இடம் : மாவட்ட விளையாட்டுத் திடல்—புதுநகர்—கடலூர்

தேதி : 17--11--67 காலை 9-30 மணிக்கு

துவக்கம் : மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை
[தமிழக முதலமைச்சர்]

தலைமை : மாண்புமிகு திரு. மு. கருணாநிதி
[தமிழகப் பொதுப்பணி அமைச்சர்]

மற்றும் மாவட்ட சீரணிக் குழுவினர்

சிறப்பு மலர் வெளியீடு :
மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி [விவசாய அமைச்சர்]

ஜே. எஸ். பாங்கோ, ஐ.ஏ.எஸ்.
மாவட்ட ஆட்சித் தலைவர்


## காமராசர் தலைமை--ஒரு கணக்கெடுப்பு!

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அதுதான், உண்மையான—அடிப்படையான அரசியல் அனுபவத்தினை -- முதிர்ச்சியினைக் காட்டும்!

ஆனால் முதன்முதலில், பதவி எப்படித் 'திடீர்' என வந்ததோ அப்படியே 'திடீர்' என நீடிக்கப்படல் வேண்டும்—என்ற நினைப்பில் ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் காத்திருக்கும் கொக்காக இருக்கிறார்!

'கட்சியின் சரிவு' என்ற காரணத்தைக் காட்டி, வட்டார மொழி வெறியின் அடிப்படையில் அவருக்கு எதிராகக் காங்கிரசில் ஓர் இயக்கம் வளர்ந்துவருவதனை, அவர் உணராமல் இருக்க நியாயமில்லை!

"இந்தியும் தெரியாது—ஆங்கிலமும் புரியாது; ஏன் இந்த ஊமைத் தலைவர் ?" என்ற கௌரவக் குறைவான தூற்றலை, ஜபல்பூர் மாநாட்டில் அவர் நேருக்குநேர் கேட்க நேர்ந்தது அவருக்கு அதிர்ச்சியைக் கொடுத்ததோ இல்லையோ—இந்தி பேசாத பகுதிகளில், அது. கட்சி வேறுபாடு கடந்த அருவருப்பைக் கொடுத்தது!

"காமராசர் மீண்டும் தலைமைப் பதவிக்கு வந்தால், எங்கள் பிணங்களின் மீதுதான்—அடுத்த 'ஜங்கலி' மாநாட்டின்போது—அவர் நடந்து செல்லவேண்டும்" என்று போர்க்குரல் கொடுத்திருப்பவர்கள், காங்கிரசுக்காரர்கள் என்பது மட்டுமல்ல—உத்தரப் பிரதேசத்துக்காரர்கள் என்பதுதான் முக்கியமானது -- கவனிக்கத்தக்கது!

இந்தப் பகுதியின் துவக்கத்துக்கான முன்னுரையிலேயே குறிப்பிட்டதைப்போல், 'நடைபெற இருப்பது, காங்கிரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தல்' என்பதைவிட, 'அதில் காமராசர் தொடர்பு கொண்டிருக்கிறார்' என்பதில், தமிழகத்துக்கு இரட்டிப்பு முக்கியத்துவம் உண்டு!

'காங்கிரசுக்காரர்' என்ற வகையில் காமராசர், எந்த்விதமான வெற்றியையோ அல்லது எந்தவிதமான தோல்வியையோ பெறுவது என்பது வேறு விஷயம்!

'தமிழர்' என்ற வகையில் அவர், 'மொழிக்கோ, இனத்துக்கோ கறை தேடிய நிலையில் திரும்பவும் வேண்டாம்; அங்கேயே நீடிக்கவும் வேண்டாம்' என்பதுதான்—கட்சி வேறுபாடு கடந்த நிலையிலும்—தமிழர்களின் ஒரே விருப்பமாக இருக்க முடியும்!

தனிப்பட்ட வகையில் தோல்வியை ஒப்புக்கொண்டு அவர் பதவியில் நீடிக்கட்டும் அல்லது பதவியை இழக்கட்டும்; ஆனால், 'தமிழர்' என்பதற்காக அவர் அந்த நிலை பெற வேண்டாம்! பெறாமல் பார்த்துக்கொள்வதும் அவர் பொறுப்பு!

தனது சொந்த அரசியல் எதிர்காலத்துக்காக அவர், எந்த வகையிலேனும் பதவி நீடிப்பைப் பெறட்டும்; ஆனால் அதற்காக அவர், தமிழர்களின் மொழியையோ பெருமையையோ சிறப்பையோ விலையாகக் கொடுக்க வேண்டாம்!

வெற்றியுடனே தோல்வியுடனே அவர், தமிழராக அனைத்திந்திய அரங்கில் இருப்பதனைத் தான் இங்கு அனைவரும் விரும்புகின்றனர்!

'ஊமைத் தலைவர்' என்ற அவப்பெயரும் அவருக்கு வரவேண்டாம்! உத்தரப் பிரதேசத்துக்காரர்களின் எதிர்ப்பு அணிவகுப்புக்கும் அவர் ஆளாக வேண்டாம்!

எஸ். ஆர்.

## நடக்க இருப்பவை - பொதுக்கூட்டங்கள்

### 16--11--67

**திருநின்றவூர்**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு இரயிலடி அருகில்; தலைவர் : ந. சீதாராமன்; பேசுவோர் : அமைச்சர் மா. முத்துசாமி, டி. இராசரத்தினம் எம்.எல்.ஏ., எஸ். கே. பாலசுப்பிரமணியம் பி.ஏ.பி.எல்., பி. சின்னசாமி, கா. மு. பாபு, புலவர் அறிவுடைநம்பி, கே. கன்னியப்பன் எம்.சி. (மாலை 5-30 மணிக்கு டி. இராசரத்தினம் தலைமையில் அமைச்சர் முத்துசாமி மின் விளக்கு ஏற்றிவைப்பார்.)

### 17--11--67

**கூத்தாநல்லூர்**

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு பெரிய கடைத் தெருவில்; தலைவர் : என். எம். ஏ. குத்தூசு; பேசுவோர் : வெ. கண்ணன், கு. பாலகிருட்டினன்; சு. தென்கோவன், ஏ. எம். ஏ. ரகீம்.

**ஆலந்தூர்**

கலைஞர் கருணாநிதி மன்றத் திறப்பு விழா; தலைவர் : ந. மோகன்ராசு; பேசுவோர் : சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., கவிஞர் அரசுதாசன். சி. இராமலிங்கம், ச. சு. இளங்கோ பி.ஏ., ஆலந்தூர் எஸ். பாலன், இர. கோதண்டராமன், மு. க. வெங்கடேசன் எம்.சி., எம். சி. மதனகோபால். மு. இராமதாசு, டாக்டர் தஸ்தகீர்.

**வெங்கடாசலபுரம்**

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில்; தலைவர் : ம. ஆனந்தன்; பேசுவோர் : நன்னிலம் நடராசன், து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ., க. செல்லமுத்து, வெ. கோவிந்தராசு, அ. கலியபெருமாள், வி. என். துரைசாமி, சி. மாணிக்கம்.

## காஞ்சி கிளை நூலகக் கட்டிட அடிக்கல் நாட்டு விழா

செங்கை மாவட்ட நூலக ஆணைக் குழு—காஞ்சி பிள்ளையார் பாளையம் கிளை நூலகக் கட்டிட அடிக்கல் நாட்டு விழா 16-11-67 மாலை 5-மணியளவில் நடைபெறும்; முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கல் நாட்டுவார்கள்.

## மாநகராட்சி மருத்துவமனை அடிக்கல் நாட்டு விழா

சென்னை மாநகராட்சித் தொத்து நோய் மருத்துவமனையில் தனிப் பிரிவு (ஸ்பெஷல் வார்டு)க்கான அடிக்கல் நாட்டு விழா, 16-11-67 மாலை 5-மணிக்கு மேயர் இரா. சம்பந்தம் தலைமையில் நடைபெறும்; மாண்புமிகு அமைச்சர் சாதிக்பாட்சா அடிக்கல் நாட்டுவார்; வரவேற்பு: இரா. சம்பந்தம் எம்.சி., எம். வேதாசலம் எம்.எல்.ஏ.

அமைச்சர்

## சத்தியவாணிமுத்து டில்லி பயணம்

தாழ்த்தப்பட்டோர் நலத்துறை—செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், நவ. 17-ம் நாள் காலை 9-25 மணிக்கு வானூர்தி மூலம் சென்னையிலிருந்து புறப்பட்டு, நவ. 18, 19-ம் நாட்களில் டெல்லியில் நடக்கும் நலத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு, மேலும் இருநாட்கள் டெல்லியில் தங்கி, நவ. 22-ம் நாள் காலை 10-45 மணிக்கு சென்னை வந்தடைவார்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

துக்களும், 'மத்திய அரசின் மறைமுகக் குறிப்பின்பேரிலேயே தர்மவீரா இதுபோல் நடவடிக்கை எடுத்திருக்கிறார்' என்ற யூகத்துக்கு இடமளிப்பதாக அரசியல் வட்டாரங்கள் நம்புகின்றன!

இதற்கிடையில், 'சட்டமன்றத்தைக் கலைப்பதற்குக் கவர்னருக்கு அதிகாரம் உண்டு' எனற மத்திய சட்டத்துறை அமைச்சகத்தின கருத்தின, வங்க முதலமைச்சர் முகர்ஜி முழுமையாக மறுத்திருக்கிறார்!